**பன்வில பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 21 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பன்வில பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

1.3.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5,088,656 ஆன செலவினம் மூலதனமாக கணக்கிடப்பட்டிருக்கல்லாததுடன், பன்வில பொது மலசல கூட்டத்தின் செலவினம் ரூபா 449,998 ல் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் புரனெகும கருத்திட்டத்தால் சபைக்கு கிடைக்க பெற்றிருந்த ரூபா 171,344 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மூலதனமாக கணக்கிடப்பட்டிருக்கல்லாததுடன், ஹுலுகல வாசிகசாலைக்கு அண்பளிப்பாக கிடைத்திருந்த ரூபா 150,000 பெறுமதியான புத்தகங்கள் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் இரண்டு மாதங்களுக்கான ரூபா 246,400 ஆன முத்திரை கட்டணம் மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டுக்கான முத்திரை கட்டணம் வருமானம் மற்றும் பெற வேண்டிய முத்திரை கட்டணம் மதிப்பீட்டு அடிப்படையில் அல்லது கணிப்பீட்டு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.2 **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டியகணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 க்கு பெற வேண்டிய கணக்கு மீதி 2 வகைகளுக்கான கூட்டுத்தொகை ரூபா 10,053,921 ஆனது. அதன் தொடர்பான கால பகுப்பாய்வு பிரகாரம் 1 முதல் 5 வரை காலத்தை விஞ்சி இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 670,192 மற்றும் 5 வருடத்தை விஞ்சிய மீதிகள் ரூபா 1,961,566 ஆனது.

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 க்கு செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,162,114 ஆனது. அதன் தொடர்பான கால பகுப்பாய்வு பிரகாரம் 1 முதல் 5 வரை காலத்தில் தீர்க்கப்படாத மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 857,093 மற்றும் 5 வருடத்தை விஞ்சிய மீதிகள் ரூபா 2,610,914 ஆனது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 1,771,446 ஆன கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு தொடர்ப்பு | | இணங்காமை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 vii (ஊ) மற்றும் xxx உப பிரிவு | | ரூபா 170,607 ஆன விளம்பர பலகை கட்டண வருமானமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | உள்ளூராச்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | | 5 வருடத்திற்கு ஒரு முறை மதிப்பிடப்பட்ட கடை அறை வாடகை சீர்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | உள்ளூராச்சி ஆணையாளரின் 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/03 கொண்ட சுற்றறிக்கையின் 10 ஆம் பந்தி | (i) | குத்தகை காரர்களால் கடையறைகள் உப குத்தகைக்கு வழங்கி வாடகையை அவ்வப்போது திருத்தி சபைக்கு செலுத்தும் வாடகை பணத்திலும் பார்க்க 90 சதவீத இலாபத்துடன் வாடகை பெற்றிருந்ததுடன் சபைக்கு செலுத்தவேண்டிய தொகையை செலுத்தியிருக்கவில்லை |
| | | (ii) | கடையறைகளை உப குத்தகைக்கு வழங்குதல் பூரண தடை என மற்றும் அது தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும், எட்டோனி அதிகார பத்திரத்தின் மூலம் 5 கடையறை உரிமையாளரினால் கடையறைகள் வேறு நபருகளுக்கு விற்பனை செய்து ரூபா 820,000 ஆன தொகை பெறப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகள் விஞ்சிய் வருமானம் ரூபா 4,219,513 ஆனதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகள் விஞ்சிய வருமானம் ரூபா 1,857,120 ஆனமையால் முன்னைய வருடத்திற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 2,362,393 ஆன வளர்ச்சியொன்று காட்டப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் ரூபா 2,362,393 ஆன வளர்ச்சிக்கு நிறுவனங்களின் குத்தகை அதிகரிப்பும் அரச மீண்டுவரும் உதவி அதிகரிப்பும் பிரதானமாக தாக்கம் விளைவித்திருந்தது.

**2.3 செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டின் மற்றும்முன்னைய 2 ஆண்டுகளுக்கு மொத்த நடைமுறை சொத்து மற்றும்மொத்த நடைமுறை பொறுப்பு இடையில் விகிதம் 1.5:1 , 1.4:1 மற்றும்1:1 ஆனது.

**2.4 வருமான நிருவாகம்**

**2.4.1 வீத வரி**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வீத வரி மீதி ரூபா 351,561 ஆனது. அம் மீதிக்கி 1-5 இடையில் வருடக் காலத்தை விஞ்சிய ரூபா 108,492 மற்றும் 5 வருடக் காலத்தை விஞ்சிய ரூபா 36,443 ஆன மீதி உள்ளடங்கப்பட்டிருந்தது.

**2.4.2 ஏனைய வருமானம்**

(அ) முச்சக்கர வண்டி தறிப்பிடம் கட்டணம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை முச்சக்கர வண்டி தறிப்பிடக் கட்டணம் மீதி ரூபா 288,050 ஆனது. அம் மீதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 149,050 ஆன மீதி உள்ளடங்கப்பட்டிருந்தது.

(ஆ) ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 52,225 மற்றும் மீளாய்வாண்டின் பற்றுச்சீட்டிடல் ரூபா 37,772 ஆன போதிலும்மீளாய்வாண்டினுள் முறையேரூபா 8,142 மற்றும் ரூபா 16,579 மாத்திரமேஅறவிடப்பட்டிருந்தது. பற்றுச்சீட்டிடலின் மற்றும் நிலுவையின் அறவீட்டு விகிதம் 15சதவீதம் மற்றும் 43சதவீதமான குறைந்த அளவைக் கொண்டிருந்தது.

(இ) நீர் கட்டணம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை நீர் கட்டணமீதி ரூபா 258,169 ஆனதுடன், அம் மீதியில்ஓர் ஆண்டுகாலத்தை விஞ்சிய ரூபா65,565 ஆன மீதி உள்ளடங்கப்பட்டிருந்தது.

(ஈ) குப்பை வரி

சபை அதிகார பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் ஹோட்டல் மற்றும் வியாபார நிலையங்களிலிருந்து குப்பை வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.3** நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 363,705ஆன தொகை பெற வேண்டியதாக இருந்த போதிலும்,பெற வேண்டிய முத்திறை கட்டணம்கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் இயந்திர உபகரண அலகின் வண்டிகளை பயன்படுத்தி புதிய வருமான வழிகளிற்கச் செல்ல பாதீட்டின் மூலம் முன்மொழியப்பட்ட போதும், வருமானம் ஈட்டல் இடம்பெற்றிருக்கவில்லை.

**(ஆ)** சபை மூலம்2012 ஆண்டின் ஹுலுகங்கை நீர்வீழ்ச்சிக்கு பக்கத்தில் நிர்மானிக்கப்பட்டகண்காட்சிக் கூடம்மற்றும் நுழைவுப் பாதை அரைவாசி பூர்த்தி செய்து கைவிடப்பட்டிருந்தன.

**(இ)** 2004 ஆண்டில் நிர்மானிக்கப்பட்டிருந்த 4 மாடிக் கட்டிடத்தின் ஓர் மாடி மாத்திரம் பயன்படுத்தப்படட்டிக்கொண்டு இருந்ததுடன், கட்டிடம் நிர்மானிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்திருந்த போதும் மீதி 3 மாடிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** சபைக்கு சொந்தமான 30 கடையறைகள் 2009 ஏப்ரல் 28 மற்றும் 2016 ஆகஸ்ட் 23 திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்விக்கப்பட்டிருந்த போதிலும், அம் மதிப்பீட்டை செயற்படுத்தாததனால் சபைக்கு ரூபா 1,658,500 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

**(ஆ)** பிரதேச சபை மூலம் பராமரிக்கப்படும் 7 நிர் கருத்திட்டங்களின் 15 வியாபார நீர் விநியோகங்கள் மற்றும் 398 வீட்டு விநியோகங்களிற்காக நீர் மாணி பொருத்தப்படாது வியாபார நிலையமொன்றிலிருந்து மாதாந்தம் ரூபா 200 மற்றும் வீட்டு விநியோகங்களிற்காக ரூபா 150 ஆன நிலையான மாதாந்தக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**(இ)** முன்னைய ஆண்டின் மாகாண குறித்த அபிவிருத்தி மாணியத்தின் கீழ் ரூபா 1,500,000 செலவில் நிர்மானிக்கப்பட்டிருந்த வாராந்த சந்தைக் கட்டிட வேலை பூர்த்தி செய்யப்பட்டு 16 மாத காலம் கடந்திருந்த போதிலும் பயனற்றதாக இருந்தது.

(ஈ) உல்லாசப் பயணிகளிற்காக பொது வசதிகள் மத்திய நிலையமொன்று நிர்மானித்தல் மற்றும் வளவின் அலங்காரத்திற்காக ரூபா 4,204,748 ஆன தொகை செலவிடப்பட்டிருந்த போதும் ஹாகல அரச பெறும்தோட்டத்திற்குச் சொந்தமான காணியை சுவீகரித்துக் கொள்ளாது இந் நிர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் கீழ் நிர்மானிக்கப்படும் கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக மற்றும் முன்னைய ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற 39 கட்டிட விண்ணப்பங்களில் 17 தொடர்பாக அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ஒரு விண்ணப்பதிற்கு மாத்திரமே இணக்கச்சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

**3.4 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பிரதேச சபைக்கு சொந்தமான ரூபா 525,000 பெறுமதியான 2 மோட்டார் சைக்கில்கள் மற்றும் ஓர் கை ட்ரெக்டர் 2-9 இடைலான வருடக்காலத்திலிருந்து பயனற்றிருந்ததுடன், முன்னைய ஆண்டில் மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த 3 வாகணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5 ஒப்பந்தக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் மத்திய மாகான வியாபார வணிக மற்றும் சுற்றுலா திணைக்களத்தின் ஒதுக்கீட்டின் மீது ஹுலுகங்க நீர்வீழ்ச்சி கண்காட்சிக் கூடம் மற்றும் நுழைவுப் பாதை செய்வதற்காக ரூபா 1,190,406 தொகை செலவிடப்பட்டிருந்தது. இக் கருத்திட்டத்திற்காக சாத்தியப்பாட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பொருத்தப்பாட்டை

இணங்கண்டு செயற்படுத்தப்படாமை காரணமாக சாத்தியமற்ற நிலையில் நிலவியது. நீர் வீழ்ச்சியை பார்வையிட பொருத்தமான முறையில் கண்காட்சிக்கூடம் திட்டமிடப்பட்டு நிர்மானிக்கப்பட்டிருக்காததுடன், கண்காட்சிக்கூடத்திற்குள் நுழைவதற்கு பொருத்தியிருந்த இரும்பு வேலி சில இடங்களில் துருப்பிடித்திருந்ததாக மற்றும்இரும்பு வேலியின் 5 மீற்றர் அளவானமீதிப் பகுதி செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் 2017 மார்ச் 07 திகதி மேற்கொள்ளப்பட்ட நிலைய பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. நிர்மானம் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டு 4 வருடங்கள் கடந்திருந்த போதும், பூர்த்தி செய்யப்பட்டு பயனுள்ள வருமானம் ஈட்டும் செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காமையினால் இது வரைமேற்கொள்ளப்பட்டிருந்த தொகை பயனற்ற செலவொன்றாக இருந்தது.

**(ஆ)** 2002 ஆண்டில் 4 மாடிகளுடன் நிர்மானிக்க திட்டமிடப்பட்டிருந்த கட்டிடமொன்றின் முதற் கட்டத்திற்காக ரூபா 2,069,000 செலவிடப்பட்டிருந்தது. ஒர் மாடி பூர்த்தி செய்யப்பட்டு 2004 ஆண்டில் ஆயர்வேதம் நிருவப்பட்டிருந்ததுடன், 14 வருடங்கள் கடந்த போதும் சதுர அடி 750 வீதமான 3 மாடிகளைப் பூரணப்படுத்தி பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ)** 2016 ஆண்டில் பிரதேச சபை வழுவூட்டும் வேலை திட்ட ஒதுக்கீட்டின் கீழ் பாதை அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்படாது கருத்திட்டத்தை நிறைவு செய்ததன் பின்னர் அளவை அறிக்கை மற்றும் கொன்கிரீட் களவையின் உறுதி தொடர்பாக (hammer Test) பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளாது ரூபா 2,000,060 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.6 கழிவு பொருள் முகாமை

சபை அதிகார பிரதேசத்தில் ஹுலுகங்க, மெல்கடே, தவலந்தென்ன, மடுல்கெலே மற்றும் மஹபதன எனும் பிரதேசங்களிலிருந்து ஒரு நாளைக்கு ஒன்றுசேரும் ஒரு டொன் அளவான கழிவுப் பொருட்களிலிருந்து உக்கலடையும் கழிவுகள் வாரத்தில் ஒரு நாள் குண்டசாலை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், உக்கலடையாத கழிவுகள் சபைக்கு சொந்தமான ஹாத்தலே மொரஹெல காணி மற்றும் ஹுலுகங்க சென்ஜோன்ஸ் ஹீல் காணிக்கு சுற்றாடலை பாதிக்கும் வகையில் இடப்பட்டுக்கொண்டிருந்தன. இக் காணிகள் 2 உம் அதிக பள்ளம் கொண்டதுடன், உக்கலடையாத கழிவுகள் இடப்படுவது சுற்றாடல் மாசடைவதற்கு முக்கிய காரணம் போன்று மண்சறிவு போன்ற இயற்கை அனர்த்தத்திற்காக தாக்கம் விழைவித்திருந்தது.

## 3.7 சுற்றாடல் பிரச்சினை

சபையினால் குப்பை இடப்படும் ஹுலுகங்க மற்றும் ஹாதலே அதிக பள்ளம் கொண்ட இரண்டு இடங்களாவதுடன், உலக மரபுரிமை நகல்ஸ் வனாந்திரத்திற்கு அருகில் உயிரியல் பல்வகையுடனான மழை காடு என பிரசித்தி பெற்ற இந் நிலங்களிற்கு முறையான முகாமையின்றி கழிவுகள் இடப்படல், சுற்றாடல் மாசடைதல் மற்றும் அழகை அழித்தல் போன்ற நீர் ஊற்றுக்கள் அசுத்தமாதல், பேலிகள் மற்றும் பிலாஸ்டிக் பகுதிகளில் மழை நீர் ஒன்றுசேருவதனால் சுகாதார பிரச்சினைகளில்அதிகரிப்பு நிலவியது.

# 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையில்,ஒதுக்கீடு மாற்றியும் பாதீடு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் இடையில், போதியளவு விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) 38 செலவின விடயங்களுக்கான ஏற்பாடு செய்த ரூபா 1,597,000 ஆன ஒதுக்கீட்டின் எந்தவொரு செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 14 வருமான விடயங்களுக்கான மதிப்பிடப்பட்ட ரூபா 1,253,600 ஆன வருமானத்தின் எந்தவொரு தொகையையும் ஈட்டிக்கொண்டிருக்கவில்லை.

## 4.2 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்கான பெறுகைகள்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) சொத்துக்கள்.
(ஆ) கணக்கீடு.
(இ) வாகன கட்டுப்பாடு.
(ஈ) வருமான நிருவாகம்.
(உ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்.
(ஊ) ஒப்பந்தக் கட்டுப்பாடு.